# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள் – 03.06.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 13794/A/2023

**திரு.R.புண்ணியமூர்த்தி** -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**கந்தர்வகோட்டை தாலுகா,** -- பொது அதிகார அமைப்பு
**புதுக்கோட்டை மாவட்டம்.**

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (03.06.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | **திரு.R.புண்ணியமூர்த்தி அவர்கள் ஆஜரானார்** |
| பொது **அதிகார அமைப்பு** | **திரு.சி.பழனிவேலு**<br>பொதுத் தகவல் அலுவலர் / **தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கந்தர்வகோட்டை அவர்கள் நேரில்** ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | **05.05.2023** |
| **மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 29.01.2022 நாளிட்ட தனது புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விபரத்தை தெரிவிக்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.** | |
| சட்டப் பிரிவு 6(3)-**ன்கீழ்** மனு **மாற்றம் செய்த** நாள் | **31.05.2023** |
| **பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள்** | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | **10.06.2023** |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) **இரண்டாம்** மேல்முறையீட்டு மனு நாள் | **28.07.2023** |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் **திரு.சி.பழனிவேலு**, பொதுத் தகவல் அலுவலர் / **தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.எண்1400/2023/ஆ1, 31.05.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் காவல் ஆய்வாளர், கந்தர்வக்கோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஆணையத்தின் முன் தெரிவித்தார்.**

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், உரிய தகவல் வழங்காமல், தவறான தகவல் வழங்கிய பொதுத்தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்படி அபராதமும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், பொய் சாட்சியம் புனைதல் பிரிவு 198 கூறும் தண்டனை பிரிவு 193-ன்படி பரிந்துரைக்கவும் கோரினார்.

**4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கபப்படவில்லை என்று கருதுகிறது. இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-**

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்களுக்கு உரிய முழுமையான தகவல்களை, "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 24.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 13794/A/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர் /
**காவல் ஆய்வாளர்,**
**கந்தர்வக்கோட்டை தாலுகா,**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

<u>மனுதாரர்</u>

**திரு.R.புண்ணியமூர்த்தி,**
**5/91E. பட்டுக்கோட்டை,**
**கந்தர்வக்கோட்டை தாலுகா,**
**புதுக்கோட்டை - 614 612.**

Copy to file

KRM/PA 03.06.2026